TNED140007012025

Presented on : 19-07-2025
Registered on : 07-08-2025
Decided on : 24-03-2026
Duration : 0 years, 8 months, 5 days

**நீதித்துறை நவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு.J.ராஜ்குமார், B.A., LL.B.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, பவானி**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 10ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.220/2025**

மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
அம்மாபேட்டை காவல் நிலையம்,
அம்மாபேட்டை.
(குற்ற எண். 423/2024). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

அன்பழகன் (42/2024)
த/பெ.குருசாமி ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>அம்மாபேட்டை காவல் நிலையம்,<br>அம்மாபேட்டை.<br>(குற்ற எண். 423/2024). |
| 2. | எதிரியின் பெயர் | அன்பழகன் (42/2024)<br>த/பெ.குருசாமி |
| 3. | எதிரியின் முகவரி | க.எண்.761 A–சின்னமுளியனூர்,<br>முஹாசிபுதூர் அஞ்சல், அந்தியூர் வட்டம்,<br>ஈரோடு மாவட்டம். |
| 4. | எதிரியின் வயது | 42/2024 |
| 5. | குற்ற நிகழ்வு நாள் | 11.10.2024 |
| 6. | புகார் தேதி | 12.10.2024 |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:09 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | N/A | | |
| 8. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Station Bail | | |
| 9. | Commitment | N/A | | |
| 10. | பிரிவு 355 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | N/A | | |
| 11. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 10.03.2026 | 10.03.2026 |
| | | அ.சா.2 | 10.03.2026 | 10.03.2026 |
| | | அ.சா.3 | 10.03.2026 | 10.03.2026 |
| | | அ.சா.4 | 17.03.2026 | 17.03.2026 |
| | | அ.சா.5 | 17.03.2026 | 17.03.2026 |
| | | அ.சா.6 | 17.03.2026 | 17.03.2026 |
| 12. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 17.03.2026 | | |
| 13. | தண்டனை அல்லது உத்தரவு | 24.03.2026 | | |
| 14 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 24.03.2026 | | |
| 15 | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் | | |

இவ்வழக்கு கடந்த 07.08.2025ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. B.S.கணேசன் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்**

கடந்த 11.10.2024–ம் தேதி மாலை 06.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சித்தாரிலிருந்து பூனாச்சி செல்லும் சாலையில்,



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:14 +0530

சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகில், சாட்சி சித்ரா மற்றும் அவரது கணவர் அண்ணாமலை ஆகியோர்கள் சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகிலுள்ள தாமரைச்செல்வன் வீட்டிற்கு முன்பு ரோட்டின் இடதுபுறம் ஓரமாக சாட்சி சித்ராவும் அவருக்கு வலது பக்கத்தில் அண்ணாமலை என்பவரும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவர்களுக்கு பின்னால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் TN 36 BS 5013-என்ற E-பைக்-ஐ எதிரி ஓட்டி வந்து நடந்து சென்ற அண்ணாமலை மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டதில், அண்ணாமலை தூக்கி எறியப்பட்டதில் கீழே விழுந்து பின்பக்கத் தலையில் பலத்த இரத்தக்காயமும் இடது தோள்பட்டை, வலது முன்னங்காலில் அடிபட்டு ரத்தகாயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே, எதிரி பிரிவு 281, 106(i) BNSன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, அம்மாபேட்டை காவல் நிலைய, காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக பிரிவு 230 BNSS ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது பிரிவுகள் 281, 106(i)BNSன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து பிரிவு 263 BNSSன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-</u>

கடந்த 11.10.2024-ம் தேதி மாலை 06.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சித்தாரிலிருந்து பூனாச்சி செல்லும் சாலையில், சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகில், சாட்சி சித்ரா மற்றும் அவரது கணவர்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:16 +0530

அண்ணாமலை ஆகியோர்கள் சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகிலுள்ள தாமரைச்செல்வன் வீட்டிற்கு முன்பு ரோட்டின் இடதுபுறம் ஓரமாக சாட்சி சித்ராவும் அவருக்கு வலது பக்கத்தில் அண்ணாமலை என்பவரும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவர்களுக்கு பின்னால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் TN 36 BS 5013–என்ற E–பைக்–ஐ எதிரி ஓட்டி வந்து நடந்து சென்ற அண்ணாமலை மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டதில், அண்ணாமலை தூக்கி எறியப்பட்டதில் கீழே விழுந்து பின்பக்கத் தலையில் பலத்த இரத்தக்காயமும் இடது தோள்பட்டை, வலது முன்னங்காலில் அடிபட்டு ரத்தகாயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ளார்.

4.2. கடந்த 11.10.2024–ம் தேதியன்று இரவு நிலைய தலைமை காவலர் கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது, ஈரோடு சுதா மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட அண்ணாமலை என்பவரது RTA இன்டிமேஷனைப் பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று விசாரித்த போது காயமடைந்த அண்ணாமலை என்பவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி சித்ரா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.423/2024, சட்டப்பிரிவுகள் 281, 125(a) BNS கீழ் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

4.3 பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற சிறப்பு உதவியாளர் ஜெயராமன் மறுநாள் 12.10.2024–ம் தேதியன்று காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் வெங்கடேஷ் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜரும், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் சித்ரா, கந்தன், முருகேசன், ஆறுமுகம், வெங்கடேஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கடந்த 15.10.2024ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி அன்பழகன் என்பவரை



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:20 +0530

கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தும், அவர் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4.4 பின்னர், சேலம் அரசு மருத்துவமனையில், சிகிச்சையில் இருந்த, விபத்தில் காயம் பட்ட அண்ணாமலை என்பவர் சிகிச்சை பலனின்றி கடந்த 12.10.2024ம் தேதியன்று பகல் 12:30 மணிக்கு இறந்து விட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேஷனை பெற்று வழக்கின் சட்ட பிரிவை 281, 125(a) BNS இருந்து சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ஆக மாறுதல் செய்து அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை நிலைய ஆய்வாளர் அவர்களிடம் ஒப்புவித்துள்ளார்.

4.5 பின்னர், தொடர் புலன் விசாரணைக்காக அ.சா.6 திரு.ஜெயமுருகன் காவல் ஆய்வளாரிடம் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்ற அவர் 03.12.2024—ம் தேதியன்று காலையில் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு தவக்கிடங்கில் இருந்த இந்த விபத்தில் இறந்து போன அண்ணாமலை என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்து தாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தும், பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான சந்திரசேகரன், அண்ணாதுரை, சின்னப்பன், மூர்த்தி, அர்ஜூனன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் 04.12.2024ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் குணசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 TN 36 BS 5013 என்ற இ—பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார்.

4.6 பின்னர், விபத்தில் காயம்பட்ட அண்ணாமலை என்பவருக்கு விபத்து பதிவேடு செய்து முதலுதவி சிகிச்சை அளித்த சுதா மருத்துவமனை மருத்துவர் சக்தி சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.8 விபத்து பதிவேடு பெற்றும், பின்னர் சேலம் அரசு மருத்துவமனையில் காயம்பட்ட அண்ணாமலை என்பவருக்கு சிகிச்சை அளித்து அவரது இறப்பை உறுதி செய்த மருத்துவர் பொன்னையன்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:23 +0530

என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கோகுல் ராம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றும், இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 04.12.2024 ஆம் தேதியன்று எதிரி மீது சட்ட பிரிவுகள் 281, 106(i) BNS கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என அரசு தரப்பு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(ஆ)BNSSன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 106(i) BNSன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **<u>தீர்வு</u>**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 11.10.2024-ம் தேதி மாலை 06.00 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சித்தாரிலிருந்து பூனாச்சி செல்லும் சாலையில், சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகில், சாட்சி சித்ரா மற்றும் அவரது கணவர் அண்ணாமலை ஆகியோர்கள் சின்னாக்கவுண்டனூர் பிரிவு அருகிலுள்ள தாமரைச்செல்வன் வீட்டிற்கு முன்பு ரோட்டின் இடதுபுறம் ஓரமாக சாட்சி சித்ராவும் அவருக்கு வலது பக்கத்தில் அண்ணாமலை என்பவரும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவர்களுக்கு பின்னால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் அடிக்காமலும் TN 36 BS 5013-என்ற E-பைக்-ஐ எதிரி ஓட்டி வந்து நடந்து சென்ற அண்ணாமலை மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டதில், அண்ணாமலை தூக்கி



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:26 +0530

எறியப்பட்டதில் கீழே விழுந்து பின்பக்கத் தலையில் பலத்த இரத்தக்காயமும் இடது தோள்பட்டை, வலது முன்னங்காலில் அடிபட்டு ரத்தகாயம் ஏற்பட்டு இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

8. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் இறந்துபோன நபரான அண்ணாமலை என்பவர் சாலையில் வரும் வாகனத்தை கவனிக்காமல் நடந்து கடந்து சென்றதால் மேற்படி விபத்து நடைபெற்றது என்றும், எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

9. பிரிவு 106(i) BNSன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட எதிரி தனது வாகனத்தில் அதிவேகமாகவும் அல்லது கவனக்குறைவாக ஓட்டி வருவதன் மூலம் யாரேனும் ஒருவருக்கு கொலைக்கு நிகராக மரணத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனம் அடையாளப்படுத்தப்படும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் அதிவேகமாகவும், அல்லது கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொலைக்கு நிகராக மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

11. இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 சித்ரா கேள்விநிலை சாட்சியமாகவும், அ.சா.2 கந்தன் மற்றும் அ.சா.3 முருகேசன் ஆகியோர் கண்ணுற்ற சாட்சிகளாகவும், அ.சா.4 வெங்கடேஷ் பார்வை மகஜர் சாட்சியாகவும், அ.சா.5 ஜெயராமன் மற்றும், அ.சா.6 ஜெயமுருகன் ஆகியோர் புலன் விசாரணை அதிகாரியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:29 +0530

12. **பிரிவு 281 BNS கீழ்கண்டவாறு கூறுகிறது.**

**பொது பாதையில் முரட்டுத்தனமாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல், மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமான அல்லது வேறு எவருக்கேனும் காயம் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய அத்தகைய வகையிலும் பொதுப்பாதை ஏதோவொன்றிலும் வண்டி எதையும் முரட்டுத்தனமாக அல்லது கவனக்குறைவாக ஓட்டுகிற அல்லது சவாரி செய்கிற எவறாயினும் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓர் ஆயிரம் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப் படவேண்டும்.**

12.1 மேற்படி பிரிவின்படிக்கு முதலாவது மற்றும் இரண்டாவது உட்கூறான சம்பவம் நடந்த இடம் பொது இடம் என்பதும், தேதி மற்றும் நேரத்தில் எதிரிதான் வாகனத்தை இயக்கினாரா என்று இருதரப்பிலும் எந்த ஐயப்பாடும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

12.2 மேற்படி பிரிவின்படிக்கு மூன்றாவது உட்கூறான எதிரி அசட்டுத்தனமான தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக TATA ACE வாகனத்தை இயக்கி லோகநாதன் என்பவருக்கு விபத்தை ஏற்படுத்தினாரா என்று பரிசிலினை செய்கையில், இவ்வழக்கின் புகார்தாரரர் மற்றும் இறந்துபோன நபரின் மனைவியான அ.சா.1 சித்ரா தனது சாட்சியத்தில், இந்த விபத்தில் இறந்துபோன அண்ணாமலை தனது கணவர் என்றும், தேதி, மாதம் நினைவில்லை என்றும், கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 5.00 மணிக்கு மேல் தானும் தனது கணவரும் சித்தாரில் உள்ள தங்கள் வீட்டில் இருந்து குறிச்சி செல்லும் சாலையில் குறிச்சியை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, தங்களுக்கு பின்னால் வந்த ஸ்கூட்டி தனது தோளில் இடித்ததாகவும், தான் திரும்பிப் பார்த்த பொழுது, தனது கணவர் கீழே கிடந்தார் என்றும், தான் தூக்கி பார்த்தபோது அவருக்கு மூக்கில் இருந்த இரத்தம் வந்ததாகவும், பின்னர் அக்கம் பக்கம் இருந்தவர்களை அழைத்து ஆம்புலன்ஸ் மூலமாக தனது கணவரை சுதா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், அங்கு ஒரு மாத காலம் எனது கணவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக் கொண்டதாகவும், மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், பின்னர், மீண்டும் தொடர் சிகிச்சைக்காக சேலம் அரசு



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:34 +0530

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், சேலம் அரசு மருத்துவமனையிலும், சுமார் ஒரு மாத காலம் உள்நோயாளியாக தனது கணவர் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டும், சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார் என்றும், தனக்கு சிறிய அடி தான் பட்டதாகவும், அந்த அடிக்காக தான் மருத்துவ சிகிச்சை எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என்றும், விபத்து நடைபெற்ற அன்று போலீசார் ஈரோடு சுதா மருத்துவமனைக்கு வந்து தன்னை விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், மேலும், சேலம் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற பிரேத விசாரணையின் போது தனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடனிருந்தேன். நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள நபர்தான் அன்று இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து தன் மீதும், தன் கணவர் மீதும் மோதி விபத்தை ஏற்படுத்தியவர் என்று கூறி சாட்சியமளித்துள்ளார்.

12.3 கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 கந்தன் மற்றும் அ.சா.3 முருகேசன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், விபத்தை தாங்கள் நேரில் பார்க்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளானர்.

12.4 வழக்கிற்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், புகாரானது, சம்பவம் நடந்த மறுநாள் கொடுக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையானது 3 நாட்கள் காலதாமதமாக இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கு எவ்வித விளக்கமும் அரசுத்தரப்பில் தரவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிரி தரப்பில் வாதிடுவதுபோல், புகாரானது சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் கொடுக்கப்பட்டதா என்று சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், அரசு தரப்பில் மேற்படி காலதாமதத்திற்கு எந்த விளக்கமும் கொடுக்கவில்லை.

12.5 இறந்துபோன நபரின் மனைவியான அ.சா.1 சித்ரா தனது புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை ஒத்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:36 +0530

***"நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருக்கிறது என்கிற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எதிரி எனக்கு ரூ.1,00,000/- செலவுக்காக கொடுத்தார் என்றால், சரிதான். எனக்கு பின்னால் வந்த வாகனம் எனது தோளில் அடித்ததை எனது புகார் மற்றும் போலீஸ் விசாரணையின் போது நான் கூறவில்லை என்றால், சரிதான்"*** என்று சாட்சியமளித்துள்ளார்.

12.6 மேலும் மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2மற்றும் அ.சா.3 அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளனர். அரசு தரப்பில் இந்நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்தும் அவர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் அரசுத்தரப்பு சாட்சிகள் யாரும் எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

12.7 மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என சாட்சியம் அளித்துவிட்டு, தனது குறுக்கு விசாரனை சாட்சியத்தில் நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கிற்க்கு அடிப்படையான புகார் மற்றும் முதல்தகவல் அறிக்கையில் கூறியுள்ளபடி தான் சம்பவம் நடைபெற்றதா என இந்நீதிமன்றத்திற்க்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், தனக்கு பின்னால் வந்த வாகனம் தனது தோளில் மீது அ.சா.1 போலீஸ் விசாரணையின் போது கூறவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது. மேற்படி கூறாதற்கும் எவ்வித விளக்கமும் அ.சா.1 கொடுக்கவில்லை. மேலும் அ.சா.1 ரோட்டில் ஓரமாக சென்றாரா அல்லது எவ்வாறு சென்றார் என்பது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்க்கு தெரியவருகிறது.

12.8 இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 வெங்கடேஷ் தனது சாட்சியத்தில், ஒருநாள் காலையில் தான் இந்திரா நகர் வீரமாத்தி அம்மன் கோவில் அருகில் இருந்த பொழுது, அங்கு வந்த போலீசார் முன்தினம் நடைபெற்ற விபத்து தொடர்பாக விசாரித்து



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:40 +0530

படம் வரைந்து தன்னிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், தான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

| |
|---|
| *மேற்படி அ.சா.4 குறுக்கு விசாரணையில்,* ***"தான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்"*** *என்று சாட்சியமளித்துள்ளனர்.* |

12.9 மேற்படி சாட்சியத்திலிருந்து மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவயிடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியத்தை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை, முன்னிலைப்படுத்தாதற்கான காரணமும் கூறிப்பிட்டு கூறவில்லை.

12.10 மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனமானது 15.10.2024ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.7 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேற்படி காலதாமதத்திற்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

12.11 மேலும், மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 திரு. ஜெயமுருகன் காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவத்தை குறித்து புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்திருந்தாலும், சான்றாவணங்களாக மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பிரேத விசாரணை அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருந்தாலும், அவரின் சாட்சியம் மற்றம் சான்றாவணங்களை வைத்து விபத்து நடந்த தேதி, இடம், மற்றும் நேரத்தில் எதிரியின் அசட்டுத்தனமான துணிச்சலுடன், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என தீர்மானிக்க இயலாது.



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.24 18:26:43 +0530

12.12 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravi kapur VS State of Rajasthan எனும் வழக்கில் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் அனுமானம் ஆகியவற்றின் மூலம் நிரூபணம் செய்யப்படலாம் மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம் செய்யப்படும் நிலையில் செயலே செப்பும் (Doctrine of res ipsa loquittur) என்ற முது மொழியும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் அசட்டுத்தனமாக தகா துணிச்சல், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், செயலே செப்பும் என்கிற விதிப்படியும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, பிரிவு 281 BNSன் படியாக உட்கூறு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

13. **பிரிவு 106(i) BNS கீழ்கண்டவாறு கூறுகிறது.**

அசட்டையினால் மரணம் விளைவித்தல். மரணம் விளைவிக்கும் குற்றமாகாமல் முரட்டுதனமாக அல்லது கவனக்குறைவான செய்கை எதானாலேயும் எவரது இறப்பை விளைவிக்க எவரொருவரும் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறைதண்டனை மேலும் அபராதமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும். மேற்படி பிரிவின்படிக்கு எதிரியின் கவனக்குறைவு அல்லது முரட்டுதனமாக செயலால் இறப்பை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க வேண்டும்.

13.1 எதிரிக்கு எதிராக பிரிவு 106(i)BNSன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் அண்ணாமலை என்பவர் இறந்துள்ளதை அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபணம் செய்தபோதும், ஏற்கனவே பிரிவு 281ன் BNS ன் கீழ் நிரூபணம் செய்யாததால், மேற்படி அண்ணாமலை என்பவரின் இறப்பிற்கு எதிரியின் அசட்டுத்தனமான துணிச்சல் மற்றும் கவனக்குறைவால் தான்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:48 +0530

காரனம் என தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரிக்கு எதிரான பிரிவு 106(i)BNSன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.

13.2 இவ்விடத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் State rep by the Inspector of Police, Aravakurichi Police Station vs Kulanthaisamy 2013 (2) MLJ (Crl) 797 என்னும் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள முன் தீர்ப்பினை சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகிறது Cannot be general Presumption and that person should have driving motor vehicle in rash and negligent manner merely because there was Accident என சுட்டிக்காட்டி உள்ளதும் எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டி வந்து இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்படவில்லை என்ற சட்ட நிலைப்பாடு இந்த வழக்கின் பொருண்மைக்கு பொருந்துவதாக உள்ளது.

14. முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை **பிரிவு 281, 106(i)BNSன்** கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு **271(1)BNSSன் கீழாக விடுதலை** செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

15. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:26:51 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

இணைப்பு:

அரசு தரப்பு சாட்சிகள்:

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.சித்ரா. |
| அ.சா.2 | திரு.கந்தன். |
| அ.சா.3 | திரு.முருகேசன். |
| அ.சா.4 | திரு.வெங்கடேஷ். |
| அ.சா.5 | திரு.ஜெயராமன், சிறப்பு உதவி ஆய்வாளர். |
| அ.சா.6 | திரு.முருகையன், காவல் ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.10.2024 | புகார் மனு. |
| அ.சா.ஆ.2 | 12.10.2024 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.3 | 12.10.2024 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 12.10.2024 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.5 | 02.12.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 03.12.2024 | பிரேத விசாரணை அறிக்கை. |
| அ.சா.ஆ.7 | 15.10.2024 | TN 36 BS 5013 என்ற இ–பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.8 | 12.10.2024 | விபத்து பதிவேடு. |
| அ.சா.ஆ.9 | 03.12.2024 | பிரேத பரிசோதனை அறிக்கை. |

அரசு தரப்பு சான்றுபொருட்கள்: – இல்லை –

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:– இல்லை –

குறிப்பு:

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.24 18:27:01 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**